
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 5 | ஜூன் 1992 | இதழ் 6



வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்

2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

ஈரோட்டில் நீங்கள் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002 (ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை

,, : பகல் 11-00—12-00...ஞாயிறு பள்ளி

,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை

செவ்வாய் : மாலை 7-15—8-30...மாதவக்காடு வேத ஆராய்ச்சி வகுப்பு

வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு

வெள்ளி : மாலை 7-00—8-30...ஜெப ஆராதனை (2-ம் வெள்ளி மாதாந்திர ஜெப ஆராதனை மாலை 5-00 முதல் இரவு 9-00 மணிவரை)

சனி : மக்கள் சந்திப்பு

## தலைப்புச் செய்திகள்


| | | |
|---|---|---|
| 1. | கிறிஸ்தவ நோயாளிகள் மருந்து சாப்பிடலாமா? | 1-4 |
| 2. | கர்த்தருடைய குடும்பம் | 5-11 |
| 3. | பாரபட்சம் ஏற்படுத்தும் பிரச்னைகள் | 12-14 |
| 4. | மத பிரிவினைகள் யாவும் மறையட்டும்! | 15-20 |
| 5. | நமது குழந்தைகள் | 21-22 |
| 6 | சிறப்புச் செய்தி மடல் | 23-28 |

# THIRUMARAI AASAAN

Editor
E.Z. SELVANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

❋ ❋ ❋

Published by Church of Christ

Manalmedu Street, ERODE-638 002, Tamil Nadu, India:

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol 5. June—1992 Issue 6


ஆசிரியவுரை

## கிறிஸ்தவ நோயாளிகள் மருந்து சாப்பிடலாமா?

இயேசு கிறிஸ்துவை வழிபடுவதாக சொல்லுகிற சில கூட்டத்தார் தங்களுடைய விசுவாசிகள் நோயுற்றால் மருத்துவ மனைகளுக்குச் செல்லக் கூடாது; மருத்துவ ஆலோசனை பெறக்கூடாது; மருந்து சாப்பிடக் கூடாது என்பர். அப்படிச் செய்தால் அவர்களை அற்ப விசுவாசிகள் என்று முத்திரை குத்தி அவர்கள் பரலோக இராஜ்ஜியத்துக்கு அருகதையற்றவர்கள் என்று கூறுகின்றனர். சகல நோய்களுக்கும் பாவமே காரணம் என்ற தவறான எண்ணத்தில் தான் அவர்கள் அப்படிக் கட்டுப்பாடு பண்ணுகிறார்கள் என்று தோன்றுகிறது. ஆனால் அது வேதாகம போதனைக்கு ஏற்ற கட்டுப்பாடல்ல.

ஒரு ஏழை, இந்து மதத்தைச் சேர்ந்தவர். அவருக்கு காச நோய் பிடித்த ஒரு குழந்தை, மூட நம்பிக்கையில் ஊறிப் போன அவர் இவர்களுடைய தவறான போதனைகளால் ஈர்க்கப்பட்டு, ஆண்டவராகிய இயேசுவை விசுவாசித்து, இவர்களுடைய ஆலோசனையின்படி அக் குழந்தையை ஆலயத்தில் கிடத்தி ஒரு மாத காலமாகக் கத்தி கூப்பாடு போட்டு ஜெபித்தனர். பாவம்! நோய் தீர்ந்த பாடில்லை, நம்பிக்கை இழந்த அந்த ஏழை மனிதன் குழந்தையின் மேல் உள்ள அன்பினால் மருத்துவ மனைக்காவது எடுத்துச் சென்றுபார்க்கலாம் என்று போதகரிடம் சொன்னார். போதகர் அவரை மடக்கி ''உன் விசுவாசம் சோதிக்கப்படுகிறது; பொறு

மையாயிரு'' என்று அதட்டி, அவரை மருத்துவ மனைக்குபோக விடாமல் தடுத்து விட்டார். இரண்டொரு தினத்தில் குழந்தை இறந்து விட்டது. நிலைமை என்ன? இப்போது அந்த ஏழை மனிதன் இழந்தது குழந்தையை மட்டும் அல்ல; அவனுடைய விசுவாசத்தையும்தான்.

இந்தக் கூட்டத்தைச் சேர்ந்த போதகர் ஒருவரையும், இந்தக் கூட்டத்தில் முன்னோடியாக இருக்கிற ஒரு நண்பனையும் நான் அறிவேன். அவர்கள் தங்களுக்கும் தங்கள் உறவினர் ஒருவருக்கும் நோய் வந்த சமயங்களில் வெளியூரில் உள்ள பிரபலமான மருத்துவ மனைக்குச் சென்று வைத்தியம் பார்த்து அறுவைச் சிகிச்சையும் செய்து கொண்டு நன்றாக இருக்கிறார்கள். அல்லேலுயா! அப்படிப் பட்டவர்கள் மற்றவர்களை இப்படித் தவறான வழியில் நடத்திச் செல்லுவது ஏன் என்று தெரியவில்லை.

ஒரு கிறிஸ்தவனுடைய சரீர வாழ்க்கையில் நோயோ, வேதனையோ ஏமாற்றமோ வருவது தவறல்ல. அது இறைவனின் கோபத்தாலோ, சாபத்தாலோ, அல்லது அவன் அல்லது அவனுடைய பெற்றோர் செய்த பெரும் பாவத்தினாலோ வந்தது என்று தீர்மானிப்பதும் சரி அல்ல. நூற்றுக்கு நூறு அப்படி அல்ல. ஆனால் சில பல வியாதிகள் அப்படியும் வருவது உண்டு. யோவான் சுவிசேஷம் ஒன்பதாம் அதிகாரத்தின் முதல் இரண்டு வசனங்களிலும், பதினோறாம் அதிகாரம் நான்காம் வசனத்திலும் விவரிக்கப்பட்டுள்ள பிறவிக் குருட்டுத் தன்மையும், லாசருவின் வியாதியும் தேவ மகிமை விளங்குவதற்கு ஏதுவாக இருக்கின்றன என்று சொல்லுகிறார் இயேசு. பழைய ஏற்பாட்டில் யோபு நீதிமான் என்றும் என் தாசன் என்றும், தேவன் நற்சான்றுவழங்கியிருக்கிறார். அவன் கூட தொழுநோயால் பாதிக்கும்படி சூழ் நிலை ஏற்பட்டது. ஆகையால் எல்லா நோய்களுக்கும் பாவம் தான் காரணம் என்று தவறாக நினைத்துக் கொண்டு அலட்டிக் கொள்ளக் கூடாது.

வியாதியும், துன்பமும் பலவீனமும் ஓர் கிறிஸ்தவனுக்கு பாவத்தினாலும், விசுவாசக் குறைவினாலும் தான் ஏற்படுகிறது என்று நம்பும் இக் கூட்டத்தார் தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலன் பவுல் எழுதின அறிவுரையை ஒரு போதும் வாசித்ததில்லையா? நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல் உன் வயிற்றுக்காகவும் உனக்கு அடிக்கடி நேரிடுகிற ப லவீனங்களுக்காகவும் கொஞ்சம் ''திராட்சை இரசமும் கூட்டிக் கொள்'' என்கிறார், (1 தீமோ 5:23) கர்த்தருடைய ஊழியக்காரன் எப்பாப்பி ராதீத்து மரணத்துக்கு சமீபமாயிருந்தான் என்று குணமாக்கும் வரம் பெற்ற பவுலே கூறுகிறார், (பிலி 2:55-27) ஏன் அவரே கூட தனக்கு இருக்கும் முள்ளைப்பற்றியும், பலவீனத்தைப் பற்றியும் குறிப்பிடுகிறார்.

(2 கொரி 12:7-10) அப்படியானால் அப்போஸ்தலனாகிய பவுலை யும், தீமோத்தேயுவையும் எப்பாப்பிராதீத்துவையும் பாவிகள் என் றும் அற்ப விசுவாசிகள் என்றும் கூறுவார்களா?

இவைகளையெல்லாம் சிந்திக்கும்போது, நோய்வாய்ப்படுவ தும், அவற்றிலிருந்து நிவாரணம் பெற கிறிஸ்தவர்கள் மருத்து வர்களுடைய உதவியை நாடுவதும் தேவ சித்தத்துக்கோ, விசுவாசத் துக்கோ முரணானது அல்ல என விளங்கும். இறைவன் தந்த அறி-வைக் கொண்டு மருத்துவம் படித்து, நோய் பற்றிய நுணுக்கங்களை ஆராய்ந்து இறைவன் படைத்த மூலிகைகள், தாவர வர்க்கங்கள் ஆகியவைகளைக் கொண்டும், இரசாயனப் பொருட்களைக் கொண் டும், மருந்து மாத்திரைகளைக் கண்டுபிடித்து மக்களுடைய வியாதி-களைத் தீர்ப்பது தவறு என்றால் விஞ்ஞான வளர்ச்சியில் சகல துறைகளிலும் ஏற்பட்டிருக்கும் பலவிதமான சௌகரியங்களை மனி தர்கள் பயன் படுத்துவது எவ்வாறு நியாயம்? சிந்திப்பீர்!

இப்படி நாம் சொல்லும்போது யாக்கோபு நிருபத்தில் ''ஒரு வன் வியாதிப்பட்டால் எண்ணெய் பூசி ஜெபம் செய்ய வேண்டும் என்று தானே சொல்லியிருக்கிறது. மருந்து சாப்பிடு என்று சொல் யிருக்கிறதா? என்று வாதிடுவர், தயவுகூர்ந்து யாக்கோபு 5:13 18 வரை உள்ள வசனப் பகுதிகளைக் கவனமாய் வாசித்துப் பாருங்கள் 'சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக' வ:14 ஆலயத்துக்கு எடுத்துக்கொண்டு போ, அங்கே வரம் பெற்ற ஊழியரைக் கொண்டு ஜெபி என்று கூற வில்லை. மேலும் எண்ணெய்பூசி என்பதின் பொருள் என்ன? சீசா பாட்டிலில் எண்ணெயைக் கொண்டு போய் அதை (மந்திரித்து) ஜெபித்து என்று பொருள் அல்ல, இது வாய்க் கால் மேட்டில் விஷ கடிக்கும், வேறு சில வியாதிகளுக்கும் தண் ணீர் மந்திரித்துத் தருகிறானே சாலையோர சாமியார்-அவனி டத்திலிருந்து காப்பியடித்த செயல்; வேதாகம போதனை அல்ல.

அந் நாட்களில், தற்காலத்தில் இருப்பதைப் போன்ற மருத் துவ விஞ்ஞானம் அவ்வளவு வளர்ந்திருக்கவில்லை, நமது ஊர்ப் பாட்டிமார்கள் அந்த காலத்தில் ஏதாவது நோய், புண் என்றால் உடனே தேங்காய் எண்ணெய்ப் பத்து ஒன்று போட்டு வைப்பார் கள். அதேபோல் இயேசு வாழ்ந்த பாலஸ்தீனா நாட்டிலும் அந்த நாட்களில் ஒலிவ எண்ணெய் சகல நோய் நிவாரணியாகக் கருதப் பட்டது. ஆகவே அப்படிச் செய்து, ஜெபித்து, கர்த்தருடைய சித்தத் துக்கு விட்டு விடுங்கள் என்று பொருள், நல்ல சமாரியன் உவமை யில் கூட ''அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சை இரசமும் வார்த்து....'' லூக் 10:34 என்று குறிப்பிட்டிருப்பதைக் கவனியுங்கள். பழைய ஏற்பாட்டில் எசேக்கியாவின் நோய் குண

மாக்கப்படுவதற்கு அத்திப்பழ அடையைக் கொண்டு வந்து பிளவையின் மேல் பற்றுப் போடுங்கள்; அப்பொழுது பிழைப்பார் என்று ஏசாயா தீர்க்கன் சொல்லவில்லையா? ஆகவே ஒருவன் வியாதியிலிருந்து குணமாக்கப்படுவதற்கு மருந்தும் தேவை, தேவ ஒத்தாசையும் அனுக்கிரகமும் தேவை,

ஒரு கிறிஸ்தவ மருத்துவ மனையில் கீழ்க்கண்ட வாசகம் எழுதப் பட்ட ஒரு அட்டை இருந்தது. 'We dress, God heals' உண்மை.

E.Z. செல்வநாயகம்

## வெற்றி வாழ்க்கை யாருக்கு அமையும்?

நீதியாய் நடந்து, செம்மையானவைகளைப் பேசி, இடுக்கண் செய்வதால் வரும் ஆதாயத்தை வெறுத்து, பரிதானங்களை வாங்காதபடிக்குத் தன் கைகளை உதறி இரத்தம் சிந்துவதற்கான யோசனைகளைக் கேளாத-படிக்குத் தன் செவியை அடைத்து, பொல்லாப்பைக் காணாதபடிக்குத் தன் கண்களை மூடுகிறவனெவனோ.

அவன் உயர்ந்த இடங்களில் வாசம் பண்ணுவான்; கன்மலைகளின் அரண்கள் அவனுடைய உயர்ந்த அடைக்கலமாகும்; அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும் அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும்.

ஏசாயா 33:15,16

# கர்த்தருடைய குடும்பம்

குடும்பம் என்று சொல்லும்போது நம்முடைய நினைவுக்கு வருவதெல்லாம் சாதாரணமாக கணவன், மனைவி குழந்தைகள் அடங்கிய குடும்பம் தான். அதில் கணவர் அல்லது தந்தை குடும்பத்தின் தலைவர்; மனைவி அல்லது தாயார் மற்றும் குழந்தைகள் அவருடைய பராமரிப்பில் இருப்பார்கள். பெரும்பான்மையான சமுதாய அமைப்புகளில் குடும்பத் தலைவர் என்ற முறையில் கணவன் அல்லது தந்தையின் பெயரே வெளியில் பிரபலமடைந்திருக்கும். ஆனாலும் குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினர்களுக்கும் அவரவர் தகுதிக்கேற்ப சில கடமைகளும் பொறுப்புகளும் இருக்கும். அதை அவர்கள் நல்லமுறையில் பயன் படுத்தி குடும்பத்தின் மேன்மைக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் உழைப்பர்.

பெற்றோர்கள் குழந்தைகளுக்குத் தேவையான காரியங்களில் கவனம் செலுத்துவர் பிள்ளைகளுக்குத் தேவையான கல்வி, உணவு, உடை ஆகியவைகளைக் கொடுத்து நல்லொழுக்கத்தையும், கீழ்ப்படிதலையும் கற்றுத் தருவர். இவைகளெல்லாம் அவர்கள் பெரியவர்களாக வளரும்போது சமுதாயத்தில் அவர்களுக்கு நற்பெயரைச் சம்பாதித்துத் தரும். அவர்கள் பாச உணர்வு வளர்ந்து ஒருவரையொருவர் தாங்கி ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பார்கள். அவர்களுடைய ஒற்றுமையையும் முன் மாதிரியையும் பார்த்து மற்றவர்கள் பெருமைப்படுவார்கள். நாடும் சமுதாயமும் அவர்களைப் போற்றும்.

அவர்கள் அப்படிக் கட்டுப்பாடாகவும் ஒற்றுமையாகவும் இருப்பதால் எதிரிகள் அவர்களைக் கண்டு அஞ்சுவர். அவர்களுக்கு நேரிடும் பிரச்னைகள், சோதனைகளை எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவர். குடும்பத்துக்குள்ளேயே கூட சில சமயங்களில் பிரச்னைகள் உருவாகலாம். அதை அடக்கமாக மூன்றாவது ஆட்களுக்குத் தெரியாமல் தங்களுக்குள்ளேயே பேசி, தேவைப்பட்டால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துக்கூட தீர்த்துக் கொள்வர் அவர்கள் ஒருவரையொருவர் தரக்குறைவாகப் பேசி மற்றவர்கள் முன்னால் கேவலப்படுத்த மாட்டார்கள், எதிரிகளும், பிறத்தியார்களும் தங்கள் குடும்பத்தைப் பற்றி மோசமாக நினைக்கும் அளவுக்கு இடம் தரமாட்டார்கள். ஒருவருக்கொருவர் பாச உணர்வில் பின்னிப் பிணைந்திருப்பதால் வதந்திகளைப் பரப்பி, அவர்களுடைய பழக்க வழக்கங்களை குணநலன்களை மற்றவர் தரக்குறைவாக விமரிசிப்பதற்கு இடம் தரமாட்டார்கள்.

அதே போல் ஆவிக்குரிய பிரகாரமாக கர்த்தருக்கு என்று ஒரு குடும்பம் உண்டு என்று எபேசு பட்டணத்துச் சபையாருக்கு பவுல் எழுதும் போது குறிப்பிடுகிறார். ''இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள **முழுகுடும்பத்துக்கும்** நாமகாரணராகிய நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி ...... எபே 3: 14,15)

அடுத்து, தீமோயுத்தேயுவுக்கு எழுதின நிருபத்தில் தாமதிப்பேனாகில் **தேவனுடைய வீட்டிலே** நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன். அந்த **வீடு** ஜீவனுள்ள தேவனுடைய சபையால் - சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது என்கிறார் (1 தீமோ 3:15) இங்கே **வீடு** என்று குறிப்பிட்டிருப்பது தேவனுடைய குடும்பத்தையே. இதை மனதில் நிறுத்திக் கொண்டு எபிரேயர் நிருபத்துக்குத் திருப்புவோம்.. ''கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்; நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மை பாராட்டலையும் முடிவு பரியந்தம் உறுதியாய்ப்பற்றிக் கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம்'' என்று எழுதப்பட்டிருக்கிறது. (எபி 3:6) அதன் பொருள் என்ன? அந்த நிருபத்தை எழுதினவரும், அந்த நிருபத்தைப் பெற்றுக் கொள்பவர்களுமே அந்த வீட்டார். அதாவது தேவனுடைய குடும்பத்தார். கிறிஸ்து அந்த வீட்டுக்குத் தலைவர் என்றாகிறதல்லவா? அப்படியானால் அந்த வீடு என்பது எது? நாம் ஏற்கனவே தீமோ 3:15ல் பார்த்தபடி **அது ஜீவனுள்ள தேவனுடைய வீடு** அதுவே தேவனுடைய குடும்பம் அல்லது சபை என்று எபிரேய நிருப ஆசிரியர் கூறியிருக்கிறார். (எபி 3:6) வேறொரு இடத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் இயேசுகிறிஸ்துவைப் பற்றிக் குறிப்பிடும்போது ''எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி

எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்'' என்கிறார் (எபே1:22,23) மீண்டும் வேறொரு சந்தர்ப்பத்தில் ''கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான் அவரே சரீரத்துக்கும் இரட்சகராயிருக்கிறார்.

ஆகையால் சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷருக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.

புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள் அப்படியே கிறிஸ்துவும் சபையிலே அன்பு கூர்ந்து

தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்துப் பரிசுத்தமாக்குகிறதற்கும்

கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுடைய சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார் (எபே 5:23-27) மேற்சொன்ன வசனங்களில் கிறிஸ்துவையும் சபையையும், கணவனுக்கும் மனைவிக்கும் ஒப்பிடப் பட்டிருப்பதையும், அவர்கள் ஒருவருக்கொருவர் பாராட்டுகிற அன்பையும் விவரிக்கப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். மனைவி கணவனுக்குக் கீழ்ப்படிந்திருப்பது எவ்வளவு அவசியமோ அதே அளவு சபை கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்திருப்பதும் இருக்க வேண்டும்.

இப்பொழுது சரீரப்பிரகாரமான குடும்பத்தோடு ஒப்பிடப்பட்டிருக்கிற கர்த்தருடைய குடும்பத்தைப் பற்றி நினைக்கும்போது கிறிஸ்துதான் மணவாளன் அல்லது தலைவர் என்றும், சபை மணவாட்டி என்றும் பார்க்கமுடியும் (யோவான் 3:29; வெளி 21:2, 9;22:17) மேலும் எப்படி மனைவி புருஷனுக்கு எல்லா விஷயத்திலும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறதோ அதே போன்று சபையாகிய மணவாட்டி, மணவாளனாகிய கிறிஸ்துவுக்கு எல்லா விஷயங்களிலும் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமல்லவா? அவருடைய சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசித்துக் கீழ்ப்படிந்தவர்களை குடும்பத்தின் பிள்ளைகளுக்கு ஒப்பிடலாம். ஏனெனில் கர்த்தர் அவர்களை இரட்சித்துத் தம்முடைய குடும்பமாகிய சபையில் சேர்த்துக் கொண்டிருக்கிறார். (மாற்கு 16:15,16; அப் 2:47) யோவான் 3;3-5 இதை ஆவிக்குரிய பிறப்பு என்கிறது அதாவது கர்த்தருடைய குடும்பத்தில் ஜெநிக்கப்பட்டிருக்கிறார்கள். இதைத்தான் அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியா சபைக்கு எழுதும்போது ''நீங்கள் எல்லோரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே

ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே'' என்கிறார் (கலா 3;26, 27)

கர்த்தருக்கு, சபை என்று சொல்லப்படும் ஒரே குடும்பம் தான் உண்டு. அவர் அதன் தலைவர் என்ற முறையில் குடும்பத்தினராகிய சபையார் எவ்விதமாக நடந்து கொள்ள வேண்டும் என்று வழி காட்டுகிறார். அதை ஏற்றுக் கொண்டு, கர்த்தரைத் தொழுது கொள்ளுகிற விஷயத்தில் எல்லாரும் ஒருமனப்பட்டு ஒற்றுமையாய்ச் செயல்பட வேண்டும். இதை விளக்கிக் கொரிந்து

பட்டணத்து சபையாருக்கு அப்போஸ்தலனாகிய பவுல் எழுதும் போது, ''எப்படியெனில் சரீரம் ஒன்று; அதற்கு அவயவங்கள் அநேகம் ஒரே சரீரத்தில் அவயவங்கள் அநேகமாயிருந்தும் சரீரம் ஒன்றாகவே இருக்கிறது. அந்தப் பிரகாரமாக கிறிஸ்துவும் இருக்கிறார்.

நாம் யூதராயினும், கிரேக்கராயினும் அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லோரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம் சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களாயிருக்கிறது.

காலானது நான் கையாயிராதபடியினாலே நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால் அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ? காதானது நான் கண்ணாயிராதபடியினாலே நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமல்லவென்றால் அது சரீரத்தின் அவயவமாயிராதோ ?

சரீர முழுவதும் கண்ணானால் செவி எங்கே? அது முழுவதும் செவியானால் மோப்பம் எங்கே?

தேவன் தமது சித்தத்தின்படி அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்தில் வைத்தார்.

அவையெல்லாம் ஒரே அவயவமாயிருந்தால் சரீரம் எங்கே ?

அவயவங்கள் அநேகமாயிருந்தும் சரீரம் ஒன்றே.

கண்ணானது கையைப் பார்த்து, நீ எனக்கு வேண்டுவதில்லையென்றும், தலையானது கால்களை நோக்கி, நீங்கள் எனக்கு வேண்டுவதில்லையென்றும் சொல்லக்கூடாது.

சரீர அவயங்களில் பலவீனமுள்ளவைகளாய் காணப்படுகிறவைகளே மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது.

மேலும் சரீர அவயவங்களில் பலவீனமாய்க் காணப்படுகிறவை களுக்கே அதிக கவனத்தைக் கொடுக்கிறோம். நம்மில் இலட்சண முற்றவைகளுக்கு அலங்கரிப்பு வேண்டியதில்லை.

சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல் அவயவங்கள் ஒன்றைக் குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைக் கொடுத்து இப்படி சரீரத்தை அமைத்திருக்கிறார்.

ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவையவங்களும் கூடப்பாடுபடும். ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூட சந்தோஷப்படும்.

நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களுமாயிருக்கிறீர்கள் (1கொரி 12;12-27)

சரீரத்தில் உள்ள அவயவங்கள் ஒவ்வொன்றும் எவ்வாறு முழுச்சரீரத்தின் நன்மைக்காக ஒற்றுமையுடன் செயல்படுகிறதோ அவ்வாறு கிறிஸ்துவின் குடும்பமாகிய ஆவிக்குரிய சரீரம் என்றழைக்கப்படும் சபையின் அங்கங்களும் ஒருவருக்கொருவர் இணக்கமாகச் செயல்பட வேண்டும் என்று பவுல் அப்போஸ்தலன் வலியுறுத்துகிறார். சபையின் அங்கத்தினர்கள் எந்த முகாந்தரத்தைக் கொண்டும் ஒருவரை எதிர்ப்பவர்களாகவோ, பொறாமைப்படுகிறவர்களாகவோ, எரிச்சலடைபவர்களாகவோ இராமல் அழுகிறவர்களுடனே அழுகிறவர்களாகவும், சந்தோஷப்படுகிறவர்களோடே சந்தோஷப்படுகிறவர்களாகவும் இருந்து கர்த்தருக்காகக் கனி கொடுப்பவர்களாக இருக்க வேண்டும்.

நாம் ஏற்கனவே பார்த்த வண்ணமாக கர்த்தருடைய குடும்பமாகிய சபை அவருடைய பெயரைத்தரித்துக் கொள்ள வேண்டும். அங்கத்தினர்கள் ''கிறிஸ்தவர்கள்'' என்று மட்டும் அழைக்கப்படவேண்டும் (அப் 11:26;26:28; 1பேதுரு 4;16 ஆகிய வசனங்களைப் பார்க்கவும்) கிறிஸ்துவின் குடும்பமாகிய சரீரமாகிய சபை ''கிறிஸ்துவின்சபை'' என்று அழைக்கப்படவேண்டும். (ரோமர் 16:16) சரீரப் பிரகாரமாக ஒரு குடும்பத்தைச் சேர்ந்த அங்கத்தினர் தன்னுடைய தகப்பனாருடைய பெயரைச் சொல்லத் தயங்கினாலோ, வெட்கப்பட்டாலோ மற்றவர்கள் அதைப்பற்றி என்ன நினைப்பார்கள்? அதே போல கிறிஸ்துவின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக் கொள்ள வெட்கப்பட்டால் அல்லது தயங்கினால் உலகம் நம்மைப் பற்றி என்ன நினைக்கும்? தயவுசெய்து சிந்தித்துப்பாருங்கள்.

சரீரப் பிரகாரமாக உள்ள ஒரு குடும்பத்துக்கு தந்தை தலைவராக இருப்பதுபோல கர்த்தராகிய இயேசுவும் தம்முடைய பிள்ளைகளுக்கு தலைவராக இருக்கிறபடியால் அவர்களை வழி நடத்துகிறார், ஆவிக்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்கிறார். அவரவர்கள் தங்கள் தங்கள் சூழ்நிலைகளில் வளர்ந்து, பூத்துக் குலுங்கி கனி கொடுக்கத் தக்க ஆலோசனைகளை நல்குகிறார். தவறு செய்யும்போது கடிந்து கொள்கிறார். தம்முடைய சித்தத்துக்கு எதிர்த்து நிற்கிறவர்களுக்குத் தண்டனை தொடுக்கிறார். பிரிவினை எண்ணமுள்ளவர்களை வெறுக்கிறார். அப்படி சிட்சிப்பது கூட அவர் அன்பினிமித்தமே. (எபி 12:5-11)

ஆனால் இன்று ஆவிக்குரிய கர்த்தருடைய குடும்பத்தின் நிலை என்ன? ஒற்றுமையில்லை, இணக்கமுமில்லை, ஆளுக்கொரு

உபதேசம் வீதிக்கு இரண்டு முரண்பட்ட ஸ்தாபனங்கள். ஆனா-லும் அவர்கள் தங்களைக் கிறிஸ்துவைப் பின் பற்றுகிறோம் என்று கூசாமல் சொல்லுகிறார்கள். ஒருவருக்கொருவர் பகைமை உணர்வு. ஒருவர் மேல் ஒருவர் பொறாமை. ஒரு கூட்டத்தார் இன்னொரு கூட்டத்தாரை உலகத்தார் முன்பு இகழ்ந்து பேசுவது இப்படி பல விதமான மாம்ச சிந்தையினால் கிறிஸ்துவின் நாமம் தூஷிக்கப்க படுசிறதே!

கர்த்தருக்கு ஒரே குடும்பம். அந்தக் குடும்பத்தில் அநே-உறுப்பினர்கள் இருக்கலாம். அதைப் புரிந்து கொள்ள முடிகிறது. குடும்பமும் பிள்ளைகளும் குடும்பத் தலைவரின் பெயரையல்லவா தரித்துக் கொள்ள வேண்டும்? திரைப்பட ரசிக மன்றங்களைப் போல இஷ்டத்துக்குப் பெயர்களைத் தரித்து கொள்வது என்ன நியாயம்? ஒரு குடும்பத்தில் பிறந்த பிள்ளைகள் சகோதரர்க-ளாகவும் சகோதரிகளாகவும் இருக்கிறபடியால் ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டும் அல்லவா? ஆனால் பகைமை உணர்வும், அடி-தடிச் சண்டைகளும் பிரிவினைகளுமல்லவா மேலோங்கி நிற்கிறது! எல்லாரும் ஒற்றுமையாகப் பாடுபட்டு குடும்பத் தலைவராகிய கர்த்தருடைய பெயரை உயர்த்திக் காட்டவேண்டுமல்லவா! ஆனால் ஒருவருக்கொருவர் பொறாமை உணர்வு கொண்டு ஒரு-வரையொருவர் கடித்துப் பட்சிக்கும் நிலைமையையல்லவா பார்க்-கிறோம்.

சரீரப் பிரகாரமான குடும்பமானாலும் சரி, ஆவிக் குரிய குடும்பமானாலும் சரி, கர்த்தருடைய சித்தத்துக்கு இசைவாக நடத் தப்படுமானால் அவைகளை விட நேர்த்தியான, மகிழ்ச்சியான நிலை வேறு எங்கே இருக்க முடியும்? அப்படிப்பட்ட சிறந்த குடும் பத்தில் நானும் ஒரு அங்கம் என்று சொல்லிக் கொள்வது எவ்வ ளவு பெரிய பாக்கியம்! கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்டதும், பரிசுத்த வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளதுமான அந்த ஒரே சபையில் அங்கம் வகிப்பது எத்துணை ஆசீர்வாதமானது! என் அருமை நண் பனே, சகோதரியே! அப்படிப்பட்ட கர்த்தருடைய குடும்பமாகிய சபையில் அங்கம் வகிக்கும் பேறு பெறாமல், மனிதர்களுடைய அறிவைக் கொண்டும், தங்களைப் பெரியவர்களாக மற்றவர்கள் புகழ வேண்டும் என்றும், தாங்கள் தான் ஞானிகள் என்ற மமதை கொண்டும், பிசாசின் வஞ்சகத்துக்குத் தெரிந்தோ தெரியாமலோ துணைபோனவர்களால் நிறுவப்பட்ட நிறுவனங்களில் அங்கம் வகித் துக் கொண்டும் இதுவும் சபைதானே என்று ஏமாந்து போயிருந் தால் இன்றே கர்த்தருடைய உபதேசச் சட்டங்களுக்கு கீழ்ப்படிந்து மறுபடியும் ஆவியினாலும் ஜலத்தினாலும் பிறந்து கர்த்தரால் அவருடைய சபையில் சேர்த்துக் கொள்ளப்பட உங்களைத் தாழ்த்

துங்கள் அப்பொழுது ஒருவரும் கெட்டுப் போவதை விரும்பாத தேவன் உங்களைத் தம்முடைய குடும்பமாகிய சபையில் சேர்த்துக் கொள்வார் (அப் 2:47) அப்பொழுது நீங்கள் அவருடைய பிள்ளையாவீர்கள் (கலா 3:26,27).

அப்படிப்பட்ட நல்ல குடும்பத்தில் பிறந்த பிள்ளைகளைப் போல குடும்ப நலனுக்காகவும், குடும்பத் தலைவராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமைக்காகவும் பாடுபட்டு மெய்க் கிறிஸ்தவத்தின் மேன்மையை உலகுக்குப் பறை சாற்றுவீர்கள். அவரும் தாம் வாக்குக் கொடுத்தபடியே உங்களுக்கு நித்திய ஜீவனையும் மோட்சானந்த பாக்கியத்தையும் நல்குவார். இதோ, அவருடைய ஆறுதலடங்கிய வாக்குறுதி "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்; என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.

என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன்.

நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்தில் நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்". (யோவான் 14:1-3)

**கள்ளத் தீர்க்கதரிசிகளை நம்பி மோசம் போகாதீர்கள்**

உங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்க தரிசிகளின் வார்த்தைகளைக் கேளாதிருங்கள், அவர்கள் உங்களை வீண் பெருமை கொள்ளும்படி செய்கிறார்கள்; கர்த்தருடைய வாக்கை அல்ல, தாங்கள் யூகித்த தரிசனத்தைச் சொல்லுகிறார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (ஏசாயா 23:16.)

பெண்கள் பகுதி

# பாரபட்சம் ஏற்படுத்தும் பிரச்னைகள்

ஓர் ஊரில் ஒரு தாயும் தகப்பனும் இருந்தனர். அவர்களுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவர்கள் மிகவும் அருமையான குடும்பம் ஆனால் ஒரே ஒரு குறை. மூத்தவனைத் தகப்பனும், இளையவனைத் தாயும் கொஞ்சம் அதிகமாக நேசித்தார்கள்.

இன்றைக்கும் கூட பல குடும்பங்களில் இவ்விதமான குறைகள் தென்படுகின்றன. பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளில் ஒருவனை உயர்த்திப் பிடித்துக் கொண்டு ''எங்கள் குடும்பத்தின் நற்பெயரை இவன் தான் காப்பாற்றுவான், இவன் தான் எங்கள் குலப் பெருமையை நிலை நாட்டுவான்'' என்று மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துவர். அது ஒரு வேளை அவர்களுக்குப் பெருமையாக இருக்கலாம். பாவம், மற்ற குழந்தைகளுக்கு அது எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தும் என்று அறியாதிருக்கிறார்கள்.

பெற்றோர்கள் தனிப்பிரியம் காட்டும் பிள்ளைகளுக்கு உணவு உடை, கல்வி ஆகிய வசதிகள் மற்ற குழந்தைகளுக்குக் கிடைப்பதை விட அளவிலும் எண்ணிக்கையிலும் அதிகம் கிடைக்கும். அவன் ஏதாவது தவறு செய்தாலும் கண்டு கொள்ள மாட்டார்கள். அவனுக்குப் பிரியப்பட்டது தாராளமாய்க் கிடைக்கும். இப்படி குழந்தைகளிடையே பாரபட்சம் காட்டுவது எங்கு போய் முடியும் என்பதைக் தெரிந்து கொள்ள பரிசுத்த வேதாகமத்திலிருந்து ஒரு நிகழ்ச்சியை எடுத்து ஆய்வு செய்வோம். அது ஆதியாகமம் 25ம் அதிகாரத்தில் தொடங்கி சில அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது அந்தக் குடும்பத் தலைவரின் பெயர் ஈசாக்கு தலைவியின் பெயர் ரெபேக்காள். ஈசாக்கு மூத்தவனாகிய ஏசாவை நேசித்தான். ஆகையால் மரணத் தருவாயில் அவனுக்குச் சில ஆசீர்வாதங்களைத் தர நினைத்து ஏசாவிடம் தெரிவித்தான். அதை ஒட்டுக் கேட்ட ரெபேக்காள் அதைத் தன் செல்லப் பிள்ளையாகிய யாக்கோபுக்குப் பெற்றுத் தர எண்ணி அவனை அழைத்து விஷயத்தைச் சொல்லி தந்திரமாகச் செயல்பட்டு ஈசாக்கினுடைய ஆசையை நிறைவேற்ற தவறான முறையில் யாக்கோபு ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளத் துணைபுரிந்தாள், அதில் தேவசித்தம் பொதிந்து கிடக்கிறது என்பது வேறு விஷயம். ஆனால் அந்த பாரபட்சம் ஏற்படுத்தின விளைவுகளை எண்ணிப் பார்ப்போம்.

இந்த விஷயம் ஏசாவுக்குத் தெரிந்த பொழுது தம்பியும் தாயும் போட்ட சதித்திட்டம் அவனைக் கொலை வெறியனாக்-

கியது. அவன் தம்பியைக் கொலை செய்து பழி வாங்கத் துடித்தான். அதை அறிந்த ரெபேக்காள் பயந்து போய் தன் இளையமகனாகிய யாக்கோபை தூர இடத்தில் இருக்கிற தன் சகோதரனுடைய வீட்டுக்கு அனுப்பி வைத்தாள். என்ன கொடுமை! அன்றைக்கு ஊரைவிட்டும் குடும்பத்தைவிட்டும் ஓடினவன் தான். பெற்றோர்கள் மரிக்கும் வரை திரும்பிவரவேயில்லை. பெற்றோர்களை உயிரோடு பார்க்கவும் முடியவில்லை அடக்கத்துக்குத்தான் வந்து சேர்ந்தான். (ஆதி35:29)

இந்தப் பாரபட்சம் ஈசாக்கின் குடும்பத்தில் ஏற்படுத்திய விளைவுகளையும் தீமைகளையும் பாருங்கள்:

1. பெற்றோர்களுக்குள்ளே போட்டி
2. சகோதரர்களுக்குள்ளே பொறாமை, வெறுப்பு
3. சகோதரனை வஞ்சித்தல்
4. தகப்பனாரிடம் பொய்
5. தகப்பனாரை ஏமாற்றுதல்
6. கொலை வெறி உணர்வு
7. காலமெல்லாம் குடும்பத்தாரை விட்டுப்பிரிவு
8. பெற்றோர்களை காணமுடியாத தனிமை, துக்கம்

ஈசாக்கும், ரெபேக்காளும் பல விஷயங்களில் சிறந்த முன்மாதிரிகள் ஆயினும் இந்த ஒரு காரியம் குடும்பத்தில் ஏற்படுத்திய பிரச்னைகள் எத்தனை என்று பாருங்கள். ஆகவே நாம் எக்காரணத்தைக் கொண்டும் குழந்தைகளிடம் பாரபட்சம் காட்டவே கூடாது. ஒவ்வொரு குழந்தைக்கும் ஆசாபாசங்களும், உணர்வுகளும் உண்டு. ஒவ்வொருவருக்கும் தான் நேசிக்கப்பட வேண்டும், நாம் கவனிக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உண்டு. நமக்கும் குடும்பத்தில் எல்லா உரிமைகளும், பெற்றோர்களுடைய அன்பும் சம அளவில் கிடைக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கும்.

பெற்றோர்கள் என்ற முறையில் நாம் பெற்ற எல்லாக் குழந்தைகளையும் ஒன்று போல பாவித்து அவர்களுக்கு நம்மீது பூரண நம்பிக்கை உண்டாகும்படி நடந்து கொள்ள வேண்டும். ஒருவேளை பிள்ளைகள் கேட்கிற அனைத்தையும் வாங்கித்தர நமக்கு முடியாமல் போகலாம், ஆனால் நிச்சயமாக நாம் அவர்களை உள்ளன்போடு நேசிக்கிறோம் முடிந்தால் செய்திருப்பார்கள் பாவம்! அவர்களுக்கு முடியவில்லை என்று அவர்கள் ஆறுதலடையும்படி, நடந்து கொள்ள வேண்டும், அது குழந்தைகளின் மன வளர்ச்சிக்கும், சரீர வளர்ச்சிக்கும், மகிழ்ச்சிக்கும் பெரும் துணை செய்யும்

ஆகவே, பெற்றோர்களே! ஒரு குறிப்பிட்ட குழந்தையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, மற்ற குழந்தைகளை மட்டம் தட்டி அந்தப் பிஞ்சு உள்ளங்களில் நஞ்சைப் பாய்ச்சும் நாச வேலையைச் செய்யவே செய்யாதீர்கள்.

நாம் ஆராதிக்கும் தேவன் பட்ச பாதமுள்ளவர் அல்ல என்று பேதுருவும் (அப் 10:34) பவுலும் கூறுகிறார்கள் (ரோமர் 2:11) ஆகையால் அவரைத் தொழுது கொள்ளுகிற நாமும் கூட பட்சபாதம் உள்ளவர்களாக இருக்கக்கூடாது என்று வேதம் நமக்கு அறிவுரை கூறுகிறது (1தீமோ 5:21; யாக் 2:9) நாம் பரத்திலிருந்து வருகிற ஞானத்தைப் பெற்றுக் கொண்டவர்களாக இருந்தால் பட்சபாதமில்லாதவர்களாயிருப்போமாக! (யாக் 3:17)

**பெட்டி பர்ட்டன் சோட்**

## யாருக்கு ஐயோ!

பாவத்தோடே பாவத்தைக் கூட்டும்படி, என்னை அல்லாமல் ஆலோசனை பண்ணி, என் ஆவியை அல்லாமல் தங்களை மூடிக் கொள்ளப்பார்க்கிறவர்களும்

என் வாக்கைக் கேளாமல் பார்வோனின் பெலத்தினாலே பெலக்கவும், எகிப்தின் நிழலிலே ஒதுங்கவும் வேண்டும் என்று எகிப்துக்குப் போகிறவர்களுமாகிய முரட்டாட்டமுள்ள புத்திரருக்கு ஐயோ என்று கர்த்தர் சொல்லுகிறார். (ஏசாயா 30:1,2)

# மதபிரிவினைகள் யாவும் மறையட்டும்!

கொரிந்து பட்டணத்திற்கு அப்போஸ்தலர் பவுல் வந்த போது, முற்றிலும் தனித்தன்மை வாய்ந்த மக்கள் கூட்டம் அலை மோதும் வர்த்தகத் துறைமுக நகராக அது இருப்பதைக் கண்டார். அந்நகர மக்களின் பின்னணியும், விருப்புகளும் மாறுபட்டவைகளாக இருந்தன. தேவ வசனம் அங்கு போதிக்கப்பட்ட போது, "கொரிந்தியரில் அநேகரும் சுவிசேஷத்தைக் கேட்டு, விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள்''. (அப். 18:8) இப்படியாக தேவனுடைய சபை கொரிந்து பட்டணத்தில் உதயமாயிற்று. பவுலும் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் அங்கு தங்கி, தேவ வசனத்தை உபதேசித்து சபையைப் பலப்படுத்தினார். என்றபோதிலும், அப்பவுல் கொரிந்து நகரை விட்டுச் சென்ற பின்னர் பல பிரச்னைகள் அங்கு உருவாயின. அவற்றில் முதலிடம் வகித்த மிகவும்ஆபத்தான பிரச்சனை பிரிவினையாகும். **''உங்களில் சிலர் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால்"** (1கொரி 1:12) விசுவாசிகள் குழுக்களாகப் பிரியத் தொடங்கி, பவுல், அப்பொல்லோ, பேதுரு ஆகியோரின் பெயர்களை தங்கள் பிரிவுகளுக்குச் சூட்டிக் கொண்டனர். (1 கொரி. 1:12) இன்றைய மத உலகில் நாம் காணும் அவலநிலைக்கு அது ஏறத்தாழ ஒப்பாக இருந்தது.

1 கொரிந்தியர் 1:10 வது வசனமானது இக்கட்டுரையின் தலைப்பை அப்படியே பிரதிபலிக்காவிட்டாலும், அந்தக் கருத்தில் கூறப்பட்ட வசனமே அது என எண்ணத் தோன்றுகிறது. ''சகோதரரே, நீங்களெல்லோரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏக மனதும் ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.'' எந்த வார்த்தையை உபயோகித்த போதிலும் இது பிரிவினை இன்றேல் வேறு எது? இன்று உங்கள் நகரில் நிலவக் கூடிய நிலைப்பற்றி அன்றே அப். பவுல் மூலமாக தேவன் உணர்த்தினார். அன்று ''நான் பவுலைச் சார்ந்தவன்'' எனக் கூறிய யாரிடமாவது நீங்கள் கேட்டால், தங்களை கிறிஸ்தவர்கள் என்றே அவர்கள் கூறி இருப்பர் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஆனால் ''ஒரு'' குறிப்பிட்ட விசுவாசத்தைக் கொண்ட கிறிஸ்தவர்களாகவோ அல்லது ''ஒரு குறிப்பிட்ட வகையைச் சார்ந்த'' கிறிஸ்தவர்களாகவோதான் இருந்திருக்க முடியும். அவர்கள் தங்-

களுக்குள்ளேயே பிரிந்து பிரிவினைக் கூட்டங்களைத் தோற்றுவித்தனர். இக்காலக் கட்டத்திலே தான் "உங்களுக்குள்ளே பிரிவினைகள் வேண்டாம்". (1 கொரி 1:10) என அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

கொரிந்து பட்டணத்தில் தோன்றிய இவ்வாறான பிரிவுகள் காரணமாக, அத்தகைய பிரிவின் இதயத்தைத் தாக்கக் கூடிய மூன்று கேள்விகளைக் கேட்கிறார் பவுல். இப்படிப்பட்ட விசுவாசிகள் அனைவரும் பிரிவினைகளைக் கை விட்டு, கிறிஸ்துவின் ஒரே சரீரத்தில் ஐக்கியப்பட இக்கேள்விகள் கேட்கப்பட்டன. 1 கொரிந்தியர் 1:13ம் வசனத்தில் அவை காணப்படுகின்றன.

## "கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?"

விசுவாசிகள் அனைவரும் ஒன்றாயிருக்க இயேசு ஜெபித்தார்: "அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன்" (யோவான்-17:20-21). அவருடைய மக்கள் பிரிந்திருப்பதை தேவன் திட்டமிடவோ அல்லது விரும்பவோ இல்லை. "தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்ஜியமும் பாழாய்ப்போம்" (மத்.12:24) என அவர் வல்லமையாகப் போதித்தார். அது போலவே, கிறிஸ்துவில் ஐக்கியமாக இருப்பதின் அவசியத்தை பற்றி அப்போஸ்தலர்களும் போதித்தனர். (எபே.4:1-6; யூதா 3). மனித சரித்திரத்தில் வெகு காலம் கடந்த பின்னரே, பிரிவினைகள் இருப்பின் பாதகமில்லை; "அவரவர் விருப்பத்திற்கேற்ற சபையில்" அங்கம் வகிப்பதே சிறப்பு என்னும் கொள்கையை மனிதன் உருவாக்கினான். உங்களைச் சுற்றிப் பாருங்கள். மூலைக்கொன்றாக ஒரு பிரிவு சபையை நீங்கள் காணமுடியும். அவைகள் எல்லாமே கிறிஸ்துவைப் பின்பற்றுவதாகத் தான் கூறிக் கொள்ளுகின்றன. என்றாலும், அப்பிரிவுகள் சட்டங்கள், விசுவாசம், அமைப்பு, ஆராதனை முறை போன்றவற்றில் ஒன்றுக் கொன்று வித்தியாசமாக இருந்து கொண்டே கிறிஸ்துவைப் பின் பற்றுவதாகக் கூறி வருகின்றன. பிற குழுக்களிடமிருந்து தங்களைப் பிரித்துக் காட்டுவதற்காக ஒவ்வொரு குழுவும் வேறு வேறு பெயர்களைச் சூட்டிக் கொள்ளுகின்றன.

ஆனால், "கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?" இந்த பிரிவினை சபைகளின் செயல்பாடுகள் யாவுமே கிறிஸ்து பிரிந்திருக்கிறார் என்றும், தங்களுடைய பிரிவில் மட்டுமே அவர் இருக்கிறார் என்றும் கூறும் கருத்தை மையமாகக் கொண்டு இயங்குகின்றன. என்றாலும்,

முரண்பாடானக் கருத்துக்களைப் போதிக்கும் இரண்டு சபைப்பிரிவுகளுக்கும் கிறிஸ்து தலைவராக இருக்கிறார் என்ற கருத்தை நியாய உணர்வு படைத்த எவராவது நம்ப முடியுமா! ஒன்றுக்கொன்று முற்றிலும் முரணாகப் போதித்துக் கொண்டும், எதிர்த்துக் கொண்டும் நிற்கும் பிரிவு சபைகள் எல்லாவற்றிற்கும் கிறிஸ்து தலைமை தாங்கி, தன்னைத்தானே எதிர்க்கிறாரா? (மத். 12:25). மேற் சொன்ன நிலையைக் கண்டுதான் ''கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?'' என அப். பவுல் கேட்டார். பிரிவினை சபைகள் கிறிஸ்துவின் அங்கீகாரம் பெற்றவை என நம்பும் ஒவ்வொருவரும் பதில் சொல்ல வேண்டிய கேள்வி இது.

''கிறிஸ்துவை நாங்கள் பிரிக்கவில்லை; நாங்கள் தான் பிரிந்திருக்கிறோம்'' என கொரிந்து பட்டணத்து மக்கள் சிலர் கூறி இருக்கக் கூடும். ஆனால் கிறிஸ்துவும் அவருடைய சபையும் ஒன்றே என்பதும் (எபே 5;22-82), அவருடைய சபைக்குச் செய்யும் துரோகம் கிறிஸ்துவுக்குச் செய்வதே என்பதும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். சவுல் சபையைத் துன்புறுத்திக் கொண்டிருந்த போது (அப் 8:3) ''என்னை ஏன் துன்புறுத்துகிறாய்?'' (அப் 9:4) என இயேசு அவரிடம் கேட்டார். சபையைப் பிரிக்கும் முயற்சி கிறிஸ்துவையே பிரிக்கும் முயற்சியாகும். நல் மனத்துடன் இக் கேள்வியை எல்லோரும் சந்தித்தால், நிச்சயமாக பிரிவுகள் மறைந்து ஒழியும் என நான் நம்புகிறேன், கிறிஸ்துவைப் பிரிக்க முடியாது என்பது தெளிவு. விசுவாசிகள் அவரைப் பிரிந்து செல்லக் கூடும். ஆனால் தன்னைத்தானே எதிர்த்துக் கொள்ளும் வகையில் கிறிஸ்துவை பிரிக்க இயலாது.

## பவுல் உங்களுக்காக சிலுவையில் மரித்தானா?

''அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்'' (மத் 1:21) என்று அவர் பிறப்பதற்கு முன்பே அறிவிக்கப்பட்டிருந்தது. அவருடைய சிலுவை மரணத்தால் நமது இரட்சிப்புக்கு அவர் காரணமானார். (எபே 2:9:9:22 கொலோ. 1;18 22. ''அவரேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை'' (அப் 4:12) என அவரைப் பற்றி அப்போஸ்தலர்கள் கூறினர். சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறே இரட்சகர் நமக்கில்லை (அப் 2: 24 36: கொரி 2:1-2) என அவர்கள் போதித்தனர். என்றாலும் கொரிந்து பட்டணத்து விசுவாசிகள் பவுலின் பெயரால் தங்களுக்குள்ளே பிரிந்திருந்தனர். எனவேதான், ''பவுலா உங்களுக்காக சிலுவையில் மரித்தான்?'' என பவுல் கேட்டார். கிறிஸ்துவே சிலுவையில் மரித்தார் என்ற பதிலை தெளிவாக்கவே அக் கேள்வி, கிறிஸ்து மட்டுமே இரட்சிக்க முடி

யும் எனவே, அவருடைய நாமத்தை மட்டுமே தரித்துக் கொண்டு கிறிஸ்துவை மகிமைப் படுத்தி, எல்லோரும் அவரைப் பின்பற்ற வேண்டியவர்களாயிருக்கிறோம்.

கிறிஸ்துவை மட்டுமே பின்பற்ற வேண்டும் என்ற கொள்கையை வேதாகமம் பல சந்தர்ப்பங்களில் நமக்குப் போதிக்கிறது. பேதுருவும் யோவானும் கூறுவதைக் கேளுங்கள் : ''தேவனுக்குச் செவி கொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவி கொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே. என்றார்கள்'' (அப்4:19-20). ''மனுஷருக்குக் கீழ்ப்படிவதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது'' என்று ஆட்சியாளரிடம் அவர்கள் கூறினர்- (அப் 5:28) ''கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல'' (2 யோவான் 9) என அப்போஸ்தலன் யோவான் அறிவித்தார். பிற்காலத்தில் கொரிந்து விசுவாசிகளுக்கு எழுதிய நிருபத்தில், ''சகோதரரே, எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ண வேண்டாம் என்று நீங்கள் எங்களாலே கற்றுக் கொள்ளவும், ஒருவனும் ஒருவனிமித்தம் மற்றொருவனுக்கு விரோதமாய் இறுமாப்படையாதிருக்கவும், நான் உங்கள் நிமித்தம் என்னையும் அப்பொல்லோவையும் திருஷ்டாந்தமாக வைத்து, இவைகளை எழுதினேன்'' (1 கொரி 4:6) என பவுல் குறிப்பிடுகிறார். உங்களுக்காக சிலுவையில் மரிக்காத எவரையும் பின்பற்ற வேண்டாம். உங்களை இரட்சிக்க தனது உயிரைக் கொடாத எவருடைய நாமத்தையும் நீங்கள் தரிக்க வேண்டாம்.

## ''பவுலுடைய பெயரால் ஞானஸ்நானம் கொடுக்கப் பட்டீர்களா ?''

''ஒரு பெயரில் ஒன்றுமில்லை'' என பலர் இன்றைய நாட்களில் கூறுவதைப் போல அப்போஸ்தலர்கள் அன்று நினைத்துப் பார்க்காவிட்டாலும், ஒரு பெயரின் சிறப்பை அவர்கள் நன்றாகவே அறிந்திருந்தனர்! ''இயேசு கிறிஸ்துவின் நாமம் அவருடைய அதிகாரத்தைக் குறிப்பதால், நாம் செய்யும் சகல காரியங்களும் கிறிஸ்துவினால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். ''வார்த்தையினாலாவது கிரியையினாலாவது நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்யுங்கள்'' (கொலோ. 3:17.) பெந்தெகோஸ்தே நாளிலே விசுவாசிகள் ''நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என இருதயத்திலே குத்தப்பட்டவர்களாக வினவியபோது, ''நீங்கள் மனந்திரும்பி,

ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்'' (அப் 2:38) எனச் சொல்லப்பட்டது. ''கிறிஸ்துவின் பெயரால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள'' (அப். 10:48) கொர்நேலியுவின் வீட்டாருக்குக் கட்டளையிடப்பட்டது. யோவான் ஸ்நானனிடத்தில் சிலர் ஞானஸ்நானம் பெற்றிருந்ததைப் பவுல் கண்டபோது, கிறிஸ்துவைப் பற்றியும் அவருடைய அதிகாரத்தைப் பற்றியும் அவர்களுக்குப் போதித்தார். ''அதைக் கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்'' (அப். 19:5). ஒரு பெயரில் ஒன்றுமில்லை என்னும் இன்றைய கூற்றை நாம் ஏற்றுக் கொண்டு பல கூறுகளாகப் பிரிந்து நிற்பது எவ்விதத்தில் நியாயம்? சிந்திப்பீர்!

ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தை இக்கேள்வியின் பதிலாக நாம் காணமுடிகிறது. ஒரு நாமத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெறுவது அவசியமாகிறது. ஒரு பெயருக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றாலொழிய அந்தப் பெயரைத் தரித்துக் கொள்ள உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை. இயேசுகிறிஸ்துவின் பெயரால் விசுவாசிகள் ஞானஸ்நானம் பெற்றபோது அவர்கள் **''கிறிஸ்தவர்கள்''** என அழைக்கப்பட்டனர். (அப். 11:26; 26:28; 1பேதுரு 4:16). பவுலுடைய பெயரால் அவர்கள் ஞானஸ்நானம் பெறாதபடியால் அவருடைய பெயரைத் தரித்துக் கொள்ள அவர்களுக்கு எவ்வித நியாயமும் இல்லை என அப். பவுல் வாதாடுகிறார். ''ஒரே ஞானஸ்நானம் (அப். 8:36-38; எபே. 4:5) அதுவே கிறிஸ்துவிடம் அவர்களை ஒன்றாக்கியது. (ரோமர் 6:3; கலா 3:26-27) தேவனை மகிமைப்படுத்த அவர்கள் கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக் கொள்ள வேண்டியதாயிருந்தது (1பேதுரு 4:16).

ஐக்கியத்தின் அவசியத்தைச் சுட்டிக்காட்ட பவுல் ஞானஸ்நானத்தைப் பற்றி பேசுகிறார். ஏன்? இயேசுவின் இரக்கம் விசுவாசிகளின் பாவங்களைக் ''கழுவ'' (அப். 22:16) அவர்கள் ''இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் சாயலில் ஞானஸ்நானம் பெறுகிறார்கள். (ரோமர். 6:3) அவருக்குள் நம்மை ஐக்கியப்படுத்தும் (எபே. 2:14-16) இதே ஞானஸ்நானம் தான் ''கிறிஸ்துவுக்குள்'' பெறப்படுகிறது. (ரோமர் 6:3; கலா. 3:27) இப்படியாக: ''இயேசுவின் நாமத்திற்குள் ஞானஸ்நானம்'' (அப். 19:5) பெறுவோர் எத்தனை பேரோ அத்தனை பேரும் சபையாகிய ''ஒரே சரீரத்துக்குள் ஞானஸ்நானம்'' பெறுகின்றனர். (1 கொரி. 12:13) கிறிஸ்துவோடும் பிற கிறிஸ்தவர்களோடும் உள்ள ஐக்கியத்தைக் குறிப்பிட, இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறுவதை பவுல் கூறுகிறார். ஞானஸ்நானமும் கிறிஸ்துவுக்குள் ஐக்கியமும் எத்தகைய முக்கியத்துவம் பெற்றவை என்பதைக் காட்டுகின்றன.

"கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுல் உங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டாரா? பவுலுடைய நாமத்தினால் நீங்கள் ஞானஸ்நானம் பெற்றீர்களா?" இவை முற்றிலும் முக்கியத்துவம் பெற்ற மூன்று கேள்விகள். விசுவாசிகள் நானூறுக்கும் அதிகமான வித்தியாசப்பட்ட பிரிவுகளாகச் சிதறிப்போக வேண்டுமென தேவன் ஒருபோதும் கருதவில்லை. 1900 ஆண்டுகளுக்கு முன்னர் கொரிந்து பட்டணத்தில் பிரிவினைகள் தவறு என சுட்டிக் காட்டப்பட்ட அதே போன்ற நிலைதான் இன்றும் இவ்வுலகத்தில் காணப்படுகிறது. அன்றும் பிரிவினை தவறு தான்? இன்றும் பிரிவினை தவறு தான். பிரிவினை பேரிலுள்ள பற்றுக்களை உதறித் தள்ளிவிட்டு, கிறிஸ்துவோடும் அவரை விசுவாசிக்கும் அனைத்து மக்களோடும் ஒன்றாயிருக்க நாம் இன்றே தீர்மானிப்போம். மனிதனால் பிற்காலத்தில் புகுத்தப்பட்ட கோட்பாடு, பெயர், கட்டளை யாவற்றையும் உடைத்தெறிவோம். வேதாகமத்தில் நாம் காணும் சரீரமாகிய ஒரே சபையின் உறுப்பாக மட்டுமே செயல்பட இன்றே தீர்மானிப்போம். அப்படிச் செய்தால் மட்டுமே நாம் "ஏக மனதும் ஏக யோசனையும்" கொண்டு ஐக்கியமாக இயங்கமுடியும்.
(1 கொரி. 1;10)

**க்லென் தர்மன்**

## புதிய ஏற்பாட்டு மார்க்கம்

புதிய ஏற்பாட்டு மார்க்கம் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் மூலம் உண்டாயிற்று: அதாவது அவரையே எக்காலத்திலும் ஒரே தலைவரும், போதகருமாக ஏற்றுக்கொண்டிருப்பது.

பக்தி உணர்வோடு, தேவனைத் தேடும் இன்றைய மக்களின் அத்தியாவசியத் தேவை எது?

* முதல் நூற்றாண்டு கிறிஸ்துவின் சபை :- (Church of Chirst
* முதல் நூற்றாண்டில் பிரசங்கிக்கப்பட்ட சுவிஷேசம் :- Gospel
* முதல் நூற்றாண்டுப் புதிய ஏற்பாட்டு மார்க்கம் :- The Way!

# நமது குழந்தைகள்

''குழந்தைகள்!'' எவ்வளவு அருமையான ஒரு வார்த்தை! **''.... இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன். வாலவயதின் குமாரர் பலவான்கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அவைகளால் தன் அம்பறாத் தூணியை நிரப்பின புருஷன் பாக்கியவான்** ......(சங் 127:4-5) என சங்கீதத்தில் நமக்குச் சொல்லப்படுகிறது. குழந்தைகள் நமது வாழ்வில் மட்டற்ற மகிழ்ச்சி தரும் ஒரு ஆச்சரியமான ஆசீர்வாதம் என்பதை மேலே காணும் வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. ''நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால். பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் ......'' என இயேசு கூறினார். மற்றுமோர் சந்தர்ப்பத்தில், **சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடம் கொடுங்கள். அவர்களைத் தடை பண்ணாதிருங்கள், பரலோகராஜ்ஜியம் அப்படிப் பட்டவர்களுடையது'' என அவர் கூறினார்.** (மத்18:13:19:14). சிறு குழந்தைகள் எவ்வளவு அழகும் அற்புதமானவைகளாகவும் இருக்கின்றன என்பதை இயேசு சுட்டிக் காட்டுவதைப் பார்க்கலாம்.

குழந்தைகளின் வளர்ச்சி அபாரமானது. இன்று தவழும் குழந்தை, நாளை நடை பயின்று ஓடி ஆடித்திரிவதும் அடுத்து தோளில் பையை மாட்டிக் கொண்டு பள்ளிக்குச் செல்வதும், பின்னர் பட்டம் பெற்று சிறகடித்துப் பறந்து செல்வதும் திரைப்படக் காட்சிகளைப் போல அடுத்தடுத்து கணப் பொழுதில் நடந்து விடும் காரியங்களாகக் காணப்படுகிறது. நமது குழந்தைகளோடு போதிய நேரத்தை நாம் செலவழிப்பதில்லை என்பது நம்மில் பலர் செய்யும் பெரிய தவறுகளில் ஒன்றென நான் கருதுகிறேன் ஒரு கெடுபிடியான அவசர உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நிறைய நெருக்கடிகள்; நமது சொந்தக் குடும்பக் காரியங்களைக் கவனிக்கவே நேரமில்லை. பல வேளைகளில் நமது குடும்பம் புறக்கணிக்கப்படுகிறது. இதுவே, கடந்த சில ஆண்டுகளாக மணமுறிவு பல மடங்காக உயர்ந்துள்ளதற்கும் முக்கிய காரணங்களில் ஒன்றென நினைக்கிறேன். குடும்பங்களில் ஒருவருக்கொருவர் மனம் விட்டுப் பேச நேரம் இல்லை. அல்லது அதற்கென நேரம் ஒதுக்குவதில்லை. எனவே, குழந்தைகள் பாதிக்கப் படுகின்றனர். திருமண உறவு பாதிக்கப் படுகிறது.

உங்களுடைய குறிப்பிட்ட நிலைக்குப் பதில்கூற எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் உறுதியாகக் கூறுவேன்: உங்கள் குழந்தைகளைப் புறக்கணிக்காதீர், எவ்வளவு நேரத்தை உங்களால் அவர்களுடன் கழிக்க இயலுமோ அவ்வளவு நேரத்தையும் செலவழியுங்கள், குழந்தைகளின் பிறந்த நாள் விழா. பள்ளிப் படிப்பு, விளையாட்டு இவற்றில் அவர்களுக்கு உதவுங்கள். நமது உதவி குழந்தைகளுக்குத் தேவை. 18 ஆண்டுகளை விரைவில் தள்ளி விட்டு 'பெரியவர்கள்' ஆகிவிடுகின்றனர் குழந்தைகள். ''ஐயோ எனது குழந்தைகளுடன் அதிக நேரத்தைச் செலவழிக்காமல் போய்விட்டேனே'' என பின்னர் வருந்த வேண்டாம். பள்ளியிலிருந்து வீட்டுக்குத் திரும்பிய சிறுவன் ஒருவன் தனது தந்தையின் தொழிலகத்திற்குச் சென்று அவரைப் பார்க்கிறான் அவனுக்குத் திண்பண்டம் வாங்கித் தந்து, வீட்டுக்கு ஓடு என்று விரட்டுகிறார் தந்தை. சிறிது நேரத்திற்குப் பின் மீண்டும் சிறுவன் தந்தையைக் காண அங்கு வருகிறான். ஒரு நாணயத்தைக் கொடுத்து அனுப்புகிறார் தந்தை. மூன்றாவது முறையும் சிறுவன் திரும்பி வருவதைக் கண்ட தந்தை, சிறிது ஆத்திரத்துடன் ''மகனே! உனக்கு மிட்டாய் வாங்கித் தந்தேன் காசும் கொடுத்தேன், இப்போ எதற்கு வந்து நிற்கிறாய்? ''என கடிந்து கொள்கிறார். ''அப்பா எனக்கு **நீங்கள்** தான் வேண்டும்'' என பதிலளிக்கிறான் பையன்

ஒரு சிறுவனையோ, சிறுமியையோ நல் வழியில் நடத்தி, நல்ல பெற்றோராகத் திகழ கொஞ்சம் சிரமப்பட வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு பெற்றோருக்கும் உண்டு என்பதை நாம் ஒரு போதும் மறவாதிருப்போம்.

கென் டெய்லர் **எஸ். எஸ். ராஜன்**

(28 ம் பக்க தொடர்ச்சி)

வீடு திரும்பும் வரையிலும், போக்கிலும், வரத்திலும் ஒவ்வொரு கட்டத்திலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நிழலிட்டுக் காத்து வழி நடத்தின தேவனுக்கு இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றி கூறி தோத்திரம் செய்து முடிக்கிறோம்.

தேவன் தாமே நம் அனைவரையும் தொடர்ந்து காத்து வழி நடத்துவாராக.

கிறிஸ்தவ அன்புடன்
தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டத்திற்காக,
(ஓம்)/-
ஈ. இசட், செல்வநாயகம் மற்றும் திட்டக்குழுவினர்.

எமது அடுத்த நிகழ்ச்சி ''இளைஞர் முகாம்'' தேதி 14-8-92 மாலை முதல் 15-8-92 மாலை வரை (சுதந்திர திருநாளன்று) இடமும் மற்ற விபரங்களும் பின்னர் அறிவிக்கப்படும்.

ஆசிரியர்.

# தமிழ் உலக
# ஆத்தும ஆதாயத் திட்டம்
## 2, மணல்மேடு வீதி, ஈரோடு - 638002.

சென்னை மாநகரம், புரசைவாக்கம் E.L.M.,
பெப்ரீஸியஸ் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அரங்கில்

**1992 மே 23ம் தேதி நடைபெற்ற**
**திருமறை ஆசான் வாசகர்கள்**
**கருத்தரங்கம்**

## சிறப்புச் செய்தி மடல்

நடத்துனர் : *ஈரோடு கிறிஸ்துவின் சபையார்.*

துணைநின்றவர்கள் : *காங்கயம், அடையாறு, கொளத்தூர், கெல்லிஸ், ஷெனாய் நகர், வண்ணாரப்பேட்டை, ராபர்ட்சன் பேட்டை, தயாள் நகர், பெரம்பூர் கிறிஸ்துவின் சபைகள்.*

பங்கேற்ற மாநிலங்கள் : *தமிழ்நாடு, ஆந்திரா, கேரளம்.*

பங்கேற்ற நகரங்கள் : *சென்னை, விசாகப்பட்டினம், ஈரோடு, காங்கயம், காக்கிநாடா, எர்ணாகுளம், மதுரை.*

உண்மைக் கிறிஸ்தவம், உலகெங்கும் பரவ வேண்டும் என்று தணியாத வேட்கை கொண்ட சான்றோர்களே, கிறிஸ்து-வுக்குள் உடன் பிறப்புகளே!

உங்கள் ஒவ்வொருவருக்கும் இரட்சகர் இயேசு பெருமானின் இனிய பெயரால் வாழ்த்து. வணக்கம், நன்றி.

எல்லாம்வல்ல தேவனுடைய கிருபையாலும், உங்களுடைய ஜெப வலிமையினாலும் சென்ற மே மாதம் 23ம் தேதி சென்னை மாநகர் புரசையில் உள்ள ஈ. எல் எம். பெப்ரீஸியஸ் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி அரங்கில் திட்டமிட்ட படி நமது திருமறை ஆசான் வாசகர்கள் கருத்தரங்கம் இனிதே நடந்து முடிந்தது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கருத்தரங்கத்திற்கு தமிழ் உலகத்தின் பல்வேறு பகுதிகளி-லிருந்தும், நூற்றுக் கணக்கான வாசகர்கள், சிந்தனையாளர்கள் வருகை தந்தனர். ஈரோடு, காங்கயம் பகுதியிலிருந்து சிறப்புப் பேருந்து ஒன்றினை அமர்த்திக் கொண்டு வருகை தந்தது அவர்-களுடைய ஆர்வத்துக்குச் சான்று பகர்ந்தது.

இக்கருத்தரங்கத்தில் தேவனுடைய ஆலோசனைகளை எடுத்-துரைக்க நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் நற்செய்தி உரை-ஞர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் முதலாம் நூற்-றாண்டில் கிறிஸ்தவம் வகித்த சிறப்பு நிலை, அதன் கொள்கைத் தூய்மை பற்றி விரிவாக விவாதித்து உரை ஆற்றினர்.
அதன் பின்னர் காலப்போக்கில் எவ்வாறு கள்ள போதகங்கள் கொல்லைப்புற வழியாய் உள் நுழைந்து, முதலாம் நூற்றாண்டுக் கிறிஸ்தவத்தின் தெய்வீக உபதேசங்களை, சிற்றறிவு படைத்த மாந்த ஞானத்தால் மாசுப்படுத்திக் கறைப்படுத்தியது என்பதனைப் பரிசுத்த வேதாகமத்திலிருந்தும் திருச்சபை வரலாற்றிலிருந்தும் பல ஆதாரங்களைக் காட்டி விளக்கமாக எடுத்துக் கூறினர்.

இன்று கிறிஸ்தவம் பல கூறுகளாகப் பிரிந்தும், முரண்பாடு-கள், மூட நம்பிக்கைகள் நிறைந்து நம்மால் அஞ்ஞானிகள் என்று வர்ணிக்கப்படுகிறவர்களால் இகழ்ந்துரைக்கத்தக்க இழிநிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்பதனை ஆதாரத்துடன் சுட்டிக்காட்டி அவைகள் உடனடியாகக் களைந்தெரியப்பட வேண்டியதின் அவசர அவசியத்தை வலியுறுத்தினர்.

அதற்கு ஒரே வழி, வேதாகமம் விளம்புவதை விவரித்துச் சொல்வோம், வேதாகமம் மௌனமாக இருக்கிற காரியங்களில் மாந்தருடைய கருத்துக்கள், அபிப்பிராயங்கள் ஆகியவைகளை தேவனுடைய அநந்த ஞானத்தோடு கூசாமல் துணிகரமாகக்

கலப்படம் செய்யும் தேவதூஷணக் குற்றத்தைத் தவிர்த்து, பரிசுத்த ஆவியானவரின் துணை கொண்டு அப்போஸ்தலர்கள் முதலாம் நூற்றாண்டில் உபதேசித்ததும் ஆதித் திருச்சபைகளால் கைக்கொள்ளப்பட்டு வந்ததுமான ஆரோக்கியமான உபதேசச் சட்டங்களை மாத்திரம் கிறிஸ்தவர்களாகிய அனைவரும் வாழ்க்கைச் சட்டங்களாக ஏற்றுக் கொண்டு செயல்பட வேண்டும்.

ஆளுக்கு ஒரு உபதேசங்களைப் போதித்து, வீதிக்கு இரண்டு கட்டங்களைக் கட்டி, திரைப்பட ரசிக மன்ற பாணியில் ஊரின் பெயராலும், நாட்களின் பெயராலும் பண்டிகையின் பெயராலும் அந்த சபை, இந்த சபை என்று பெயர் சூட்டி மக்கள் மத்தியில் குழப்பத்தை உண்டு பண்ணக்கூடாது என்றும் அறிவுரை கூறினர். கலந்து கொண்ட அனைவருமே, அருள் உரைஞர்கள் எடுத்து வைத்த கருத்துக்களையெல்லாம் ஆய்ந்து பார்த்து, தங்களை ஆட்கொண்டிருந்த அறியாமை, மாயை ஆகியவைகளிலிருந்து விடுபட்டு முதலாம் நூற்றாண்டு தூய கிறிஸ்தவத்தை மீட்டு அமைக்கும் பணிக்குத் துணை நிற்போம் என்று சூள் உரைத்து உறுதியளித்தனர்.

புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவ நீதி நெறிகளைப் பகுத்தறிவுத் தேனில் குழைத்துப் பகுத்துப் போதித்த நற்செய்தி உரைஞர்களின் பெயர்கள் வருமாறு. 1. சகோ. தேவதானம்—பெரம்பூர் (சென்னை). கே.ஜி குமார் — காக்கி நாடா, (ஆந்திரா), 3. சாஜு ஜார்ஜ் — எர்ணாகுளம் (கேரளா) 4. பீட்டர் பி. டெனிஸ் — கொளத்தூர், சென்னை), 5. கே மல்லிக் கோட்டூர், சென்னை, 6) எஸ். ராஜநாயகம் — காங்கயம் (பெரியார்) 7) ஜி. தானியேல் — ஷெனாய் நகர் - (சென்னை), 8) வி. பன்னீர்தாஸ் - மதுரை, 9) சித்தார்த்தன் சென்னை, 10) ஈ. இசட். செல்வநாயகம் (ஈரோடு).

இக்கருத்தரங்கத்தின் பொருளாதாரத் தேவைகளை சந்திக்க தேவனால்ஏவப்பட்டசான்றோர்களையும்நிறுவனங்களையும்இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. அவர்களில் பெரும்பாலோர் தங்களுடையப் பெயர்களை விளம்பரப்படுத்தி, கர்த்தரால் கிடைக்கும் ஆசீர்வாதங்களை இழக்கச் செய்ய வேண்டாம் என்று வினயமாய் வேண்டிக் கேட்டுக் கொண்டனர். (மத் 6:1) ஆயினும் தங்கள் அத்தியாவசியமான செலவுகளைக் குறைத்தும், அன்றாடத் தேவைகளைத் துறந்தும், தங்கள் இதயக் கஜானாக்களைத் தாராளமாய்த் திறந்து கர்த்தருடைய பணிகளுக்கு அள்ளி வழங்கிய காணிக்கைகள் நியாயமான முறையில் கர்த்தருடைய நாம மகிமைக்கும் அவருடைய ஆட்சி எல்லை விரிவாக்கப் பணிக்கும் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிந்தால் கொடுத்தவர்களுக்கு மன நிறைவும், கொடுக்க விரும்புவர்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தரும்

என்ற எண்ணத்தில் அவர்களுடைய அன்பு வேண்டுகோளை-யும் மீறி அவர்களுடைய பெயர்களை இங்கு வெளியிடுகிறோம் சம்மந்தப்பட்டவர்கள் தயவு செய்து எங்களை மன்னிப்பார்களாக! (இயேசு தம்மால் சுகமாக்கப்பட்டவர்களிடம், இதை யாருக்கும் சொல்லக்கூடாது என்று கட்டளையிட்டிருந்தும், பயன் அடைந்த தவர்கள் மாறாக அதை அதிகமாய் விளம்பரப்படுத்தியதை நினைவு கூர்க)

**1. செங்கை எம்.ஜி.ஆர் மாவட்டம்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி. தேவகிருபை | .. | 20.00 |

**2. கோவை மாவட்டம் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | சகோ, எல். வின்செண்ட் | .. | 100.00 |
| 2. | சகோ. ஏ. முருகேசன் | .. | 100.00 |
| 3. | திரு. ஜே. அளகேசன் | .. | 50.00 |

**3. திண்டுக்கல் அண்ணா மாவட்டம் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு பி. சாலமோன் ஞானப்பிரகாசம் | .. | 100.00 |

**3. சென்னை மாநகர் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | கொளத்தூர் & கெல்லிஸ் கிறிஸ்துவின் சபை | .. | 610 00 |
| 2. | சகோ. சித்தார்த்தன் கிறிஸ்துவின் சபை | .. | 500.00 |
| 3. | ஷெனாய் நகர், கிறிஸ்துவின் சபை | .. | 100.00 |
| 4. | திரு. ஜெய்சேகர் | .. | 100.00 |
| 5. | திருமதி சாந்தி கிங்ஸ்டன் | .. | 100.00 |
| 6. | சகோ. பீட்டர் பி. டென்னிஸ் | .. | 100.00 |
| 7. | திரு.கே லாரன்ஸ் | .. | 50 00 |
| 8. | திரு ஜி தாமஸ் | .. | 10.00 |
| | | | 1520.00 |

**5. நீலகிரி மாவட்டம் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி மார்கரெட் நீலாண்டி | .. | 200.00 |
| 2. | சகோ வி.பி. மோகன் | .. | 100.00 |
| 3. | சகோ ஹென்றிமோகன் | .. | 100.00 |

**6. அம்பேத்கார் வடஆர்காடு மாவட்டம் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு ஏ. மாசிலாமணி | .. | 200.00 |
| 2. | திரு எஸ். குணசேகரன் | .. | 100.00 |

**7. பெரியார் மாவட்டம் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு.பி. ரவீந்தரன் | .. | 101.00 |
| 2. | செல்வி. சுசித்ரா | .. | 100.00 |
| 3. | திரு. மனோகரன் | .. | 100.00 |
| 4. | சகோ வி. எம். ஆறுமுகம் | .. | 100.00 |

| | | |
|---|---|---|
| 5. திரு துளசிங்கம் பால் | .. | 100.00 |
| 6. டாக்டர் எஸ் மரியதாஸ் | .. | 50.00 |
| 7. திருமதி. புஷ்பகாந்தி | .. | 20.00 |
| 8. சகோ. பி. எம். ராஜன் | .. | 15.00 |
| 9. திரு எம். சகரியாஸ் | .. | 10.00 |
| 10. திரு வி.எஸ். துரைராஜ் | .. | 10.00 |
| | | 606.00 |

**8. சேலம் மாவட்டம் :**

| | | |
|---|---|---|
| 1. திரு. அருண் | .. | 20. 00 |

**9. தென்ஆற்காடு மாவட்டம் :**

| | | |
|---|---|---|
| டாக்டர். அசோக் குமார் | .. | 200. 00 |

**10. காயிதே மில்லத் மாவட்டம் :**

| | | |
|---|---|---|
| 1) ராஜா சிங் | .. | 8. 00 |

**11. நெல்லை மாவட்டம் :**

| | | |
|---|---|---|
| 1) ஜவஹர் துரை | .. | 25. 00 |

**12. வ.உ.சி. மாவட்டம் :**

| | | |
|---|---|---|
| 1) ஜான் கிறிஸ்டோபர் | .. | 20. 00 |

**13. ஆந்திரா மாநிலம் :**

| | | |
|---|---|---|
| 1) தயாள் நகர் கிறிஸ்துவின் சபை | .. | 500. 00 |
| 2) சகோ. அறிவழகன் | .. | (மூன்று ஊறுகாய் பாட்டல்,6 கட்டு கடலைப் பருப்பி) |

**14. கர்நாடக மாநிலம் :**

| | | |
|---|---|---|
| 1. ஒய். சாமுவேல் பிரடெரிக் | .. | 50. 00 |
| 2. ஏ. ஜார்ஜ் | .. | 50. 00 |
| 3. பால் ஆமோஸ் | .. | 25. 00 |

## மாவட்ட வாரியாக

| | | |
|---|---|---|
| செங்கை | .. | 20. 00 |
| கோவை | .. | 250. 00 |
| திண்டுக்கல் | .. | 100. 00 |
| சென்னை மாநகர் | .. | 1520. 00 |
| நீலகிரி மவாட்டம் | .. | 400. 00 |
| அம்பேத்கார் | .. | 300. 00 |
| பெரியார் | .. | 606. 00 |

| | | |
|---|---|---|
| சேலம் | .. | 20. 00 |
| தென்ஆற்காடு | .. | 200. 00 |
| காயிதே மில்லத் | .. | 8. 00 |
| நெல்லை மாவட்டம் | .. | 25. 00 |
| வ. உ. சி. மாவட்டம் | .. | 20. 00 |
| ஆந்திரா மாநிலம் | .. | 500. 00 & சில பொருட்கள் மதிப்பு ரூ. 100/- |
| கர்நாடகா மாநிலம் | ... | 125. 00 |
| | | 3994. 00 |

இக்கருத்தரங்கின் தேவைகளைச் சந்திப்பதற்கு தன்னார்வத்தோடு அள்ளித்தந்த நிதியே போதுமானவைகளாக இருந்தபடியால் வழக்கமாக எங்கள் இறைபணிகளைத் தாங்கும் பலரை நாங்கள் சந்திக்காமலேயே விட்டுவிட்டோம். அவர்கள் அடுத்து வரும் நிகழ்ச்சிகளுக்கு உதவி ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளஉள்ளோம். பொறுத்துக் கொள்ளுங்கள்.

முடிவாக இக்கருத்தரங்கத்தின் வெற்றிக்குத் தங்கள் உழைப்பாலும், செல்வாக்காலும், சேவையாலும், ஜெபத்தாலும் உதவியவர்களின் எண்ணிக்கை எண்ணிலடங்கா. அவர்கள் அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அவ்வளவு பெயர்களையும் வெளியிட விரும்புகிறோம். ஆனால் இட நெருக்கடி காரணமாக ஒரு சிலரை மட்டுமே இங்கே குறிப்பிடுகிறோம்.

முதலாவது இடவசதிகளைப் பெற்றுத் தருவதில் உதவிய திரு. சி.பி. தங்கராஜ், தாளாளர், டி.ஈ.எல்.சி. பெண்கள் மேல் நிலைப்பள்ளி, புரசவாக்கம், சென்னை அவர்களுக்கும், அனுமதி அளித்த திரு சத்தியதாஸ், தலைமை ஆசிரியர், ஈ.எல்.எம். பெர்ரீ ஸியஸ் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, புரசவாக்கம், சென்னை மற்றும் அவரது உடன் ஊழியர்களுக்கும், சகோதரர்கள் சித்தார்த்தன், ஜீ. தானியேல், எஸ்ரா ஸ்டீபன், மக்கள் இயக்கம் இதழ் ஆசிரியர், திரு. ஜான் ஸ்வார்ட்ஸ் அவர்களுக்கும், ஒலி, & ஒளி அமைத்துதவியவர்களுக்கும், பல்வேறு இடங்களிலிருந்து வருகை தந்து சிறப்பித்த வாசகப் பெருமக்களுக்கும், சபையாகக் கலந்து கொண்டவர்களுக்கும் எங்கள் நன்றியினைத் தெரிவித்துக் கொள் கிறோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக என்றைக்குக் கருத்தரங்கத்தைப் பற்றி சிந்தித்தோமோ அன்று முதல் கருத்தரங்கம் நிறைவுபெற்று


(22-ம் பக்கம் பார்க்கவும்)

YOUR ATTENTION PLEASE !

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9:00 to 9: 5 P. M.
Fridays - 7:45 to 8:00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi- 110049
Thursdays-9:00 to 9-15 P. M.
Fridays- 9:00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:5 P. M.
Sundays-12 45 to 1: 00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bankalore 560004.
Sundays - 1:45 to 2:00 P.M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bibie Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20. M.M. ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே.

**வேண்டுவோர் தொடர்பு கொள்க :**

E.Z. செல்வ நாயகம், 2, மணல்மேடு வீதி,
ஈரோடு - 638 002.

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.

Editor. E.Z. Selvanayagam.

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to,
The Editor
THIRUMARAI AASAAN
Post Box No: 58 ERODE-638 001.